# பஞ்சவடி க்ஷேத்திரத்தில் மத்திய திருப்பதி உருவான திவ்ய சரித்திரம்
# பஞ்சவடி க்ஷேத்திரம்

1999ம் ஆண்டு ஜூன் மாதம் 24ந் தேதி வியாழக்கிழமையன்று ப்ரும்மஸ்ரீ ரமணி அண்ணா அவர்களுக்கு ஆஞ்ஜநேய ஸ்வாமி தன் அருட்கட்டளை மூலம் தனக்கும் தன் பிரபுவான ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்திக்கும் ஓர் ஆலயம் அமைக்க ஆணையிட்டார். பாப்பாஞ்சாவடி என்கின்ற கிராமத்தில் திரு.சந்தானம் அய்யங்காருக்கு சொந்தமான நிலத்தில் இந்த தெய்வீக நிகழ்வு நடைபெற்றது. திரு.சந்தானம் அய்யங்காரிடம் திரு.ரமணி அண்ணா அவர்கள் இந்த ஆணை பற்றிக் கூறினார். திரு.சந்தானம் அய்யங்கார் சற்றும் தயங்காமல் ஆஞ்ஜநேய ஆக்ஞை அப்படி என்றால் ஆலயம் அமைவதற்கான நிலத்தை வழங்குவதாக உறுதியளித்தார்.

இந்த பெரும் பணி பற்றி தெளிவு பெறுவதற்காக சென்னை, நங்கநல்லூரில் அமைந்துள்ள 32அடி ஆஞ்ஜநேயர் ஆலயத்தில் திருவுளச்சீட்டு சமர்ப்பித்து வணங்கி நின்றனர். அந்த திருவுளச்சீட்டின் மூலம் ஆஞ்ஜநேய ஸ்வாமி பாப்பாஞ்சாவடியில் திரு.ரமணி அண்ணா அவர்களுக்கு அசரீரியாக தாம் கட்டளை இட்டது உண்மையே என்றும் விரைந்து ஆலய நிர்மாணப் பணிகளை துவக்குமாறும் சுபமாக அறிவுறுத்தியது.

தமிழ்நாட்டில், விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திண்டிவனம் - புதுச்சேரி மார்க்கத்தில் அமைந்துள்ளது இந்த பாப்பாஞ்சாவடி என்கின்ற கிராமம். ஆலயம் அமைப்பது தொடர்பாக மேலும் தெளிவு பெற திரு.ரமணி அண்ணா அவர்களுடன் திரு.சந்தானம் அய்யங்கார் மற்றும் சில பக்தர்களும் கேரள தேசத்தில் பையனூர் என்கின்ற சிற்றூரில் ஆலய நிர்மாணம் மற்றும் அது சம்பந்தமான விஷயங்களில் மிகுந்த தேர்ச்சி பெற்ற திரு.K.A.நாராயண பொதுவாள் என்கின்ற பெரியவரை சந்திக்க சென்றனர். தலைமுறை தலைமுறையாக அஷ்டமங்கள தேவ ப்ரசனம் என்னும் ஆருடக்கலையில் பெரும் புலமை பெற்றவர் திரு.நாராயண பொதுவாள் அவர்கள் தாங்கள் வந்த நோக்கத்தை திரு.ரமணி அண்ணா அவர்கள் மூலம் திரு.நாராயண பொதுவாள் அவர்களிடம் தெரிவித்தனர். அஷ்டமங்கள தேவப்ரசனம் மூலம் திரு.பொதுவாள் அவர்கள் கூறிய விவரங்களாவது :

1. பாப்பாஞ்சாவடி கிராமத்தில் ஆஞ்ஜநேய ஸ்வாமி திரு.ரமணி அண்ணா அவர்களுக்கு கட்டளை இட்டது உண்மையே.
2. தனக்கும் தன் பிரபுவான ஸ்ரீராமசந்திர மூர்த்திக்கும் அந்த புனித தலத்தில் ஓர் ஆலயம் நிச்சயமாக அமைக்கப்படவேண்டும்.
3. அந்த ஆலயத்தில் ஆஞ்ஜநேயஸ்வாமிக்க 36 அடி உயரத்தில் ஒரு திருமூர்த்தம் அமைய வேண்டும். அவர் பஞ்சமுக விஸ்வரூபனாக எழுந்தருள்வார். முறையே ஹயக்ரீவர், ஸ்ரீநரசிம்மர், ஸ்ரீஆதிவராஹர், கருடாழ்வார் மற்றும் ஐந்தாவதாக ஆஞ்ஜநேய முகத்துடனும் அவர் எழுந்தருள்வார் என்றும் தேவ ப்ரசனம் தெளிவாக்கியது. ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு 10 கைகள் அமையும் என்றும் அவருடைய அந்த பத்துக் கைகளிலும் 10 மங்கள வஸ்துக்களை தரிசித்து பக்தர்களுக்கு அருள் மழை பொழிவார் என்றும் ஆணித்தனமாக தேவ ப்ரசனம் விளக்கியது. பஞ்சமுக ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் இருக்கும் என்றும் மொத்தமாக பதினைந்து கண்கள் அமையுமென்று கூறினார்.

4. ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு எதிரே கிழக்கு முகமாக ஸ்ரீராமசந்த்ர மூர்த்திக்கு ஒரு ஸந்நிதி அமையும் என்றும் அவர் ஜெயமங்கள பட்டாபிராமனாக ஏள்ளி வரும் பக்தர்களுக்கு வேண்டும் வரம் அனுக்ரஹிப்பார் என்றும் அறிவுறுத்தியது. ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன சுக்ரீவ அங்கத ஜாம்பவ விபீஷண ஹநுமத் ஸமேதராய் ஸ்ரீ பட்டாபிஷேக ஸ்ரீராமர் இங்கே சாஸ்வதமாய் எழுந்தருளி ஊரும் உலகமும் செழிக்க மங்கள நாயகனாக ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அருள் புரிவார் எனவும் தெளிவுற தேவப்ரசனம் விடை பகர்ந்தது. உலகத்தில் வேறு எந்த ஆலயத்திலும் அமையாதபடிக்கு இங்கே பட்டாபிஷேக ராமர் 10 பரிவாரங்களுடன் அமைவார் என்றும் அன்றே ஆருடம் கூறியது இந்த தேவப்ரசனம்.
5. மிக முக்கியமான விளக்கமாக வெளிப்பட்ட உண்மை ஆச்சரியப்படத் தக்கது இந்த க்ஷேத்திரம் பஞ்சவடீ க்ஷேத்திரம் என்றே அழைக்கப்படும் என்று தெளிவாக்கியது.
6. பஞ்சவடீ க்ஷேத்திரம் அமைவதில் திருமலை திருப்பதி வேங்கடாசலபதிக்கு மிகுந்த ஊற்றம் உண்டு என்றும் தான் விரும்பிய காலத்தில் தானே பஞ்சவடீயில் எழுந்தருள்வார் என்றும் தேவப்ரசனம் மூலம் பெரிய உண்மை வெளிப்பட்டது. திரு.பொதுவாள் அவர்கள் திரு.ரமணி அண்ணா மற்றும் பக்தர்கள் 18.08.1999 புதன்கிழமையன்று திருமலை வேங்கடாசலபதி ஸந்நிதியில் உஷத்கால பூஜைகள் ஆலய நிர்மானத்திற்கு தங்கள் காணிக்கையாக தனசேகரம் செய்ய வேண்டும் என்றும் அந்த பணியை திருவேங்கடவன் திருமுன்பே அவன் ஸந்தியில் செய்ய வேண்டும் என்றும் பணித்தார். திரு.ரமணி அண்ணாவும் மற்றும் உடன் சென்ற பக்தர்களும் அவ்வாறே செய்தனர்.
7. பஞ்சவடீ க்ஷேத்திரம் அமைய கோவில் மற்றும் ஸந்நிதி சார்ந்த திருப்பணிகள் மேற்கொள்வதற்காக Panchamukha Sri Jayamaruthi Seva Trust என்ற அறக்கட்டளையும் அன்னதானம் போன்ற சிறந்த அறப்பணிகள் மேற்கொள்வதற்காக Panchamukha Sri Jayamaruthi Charitable Trust என்ற அறக்கட்டளையும் ஏற்படுத்தி தரும மிக சான்றோர்களை அறக்கட்டளை அறங்காவலர்களாக நியமிக்கவும் திரு.பொதுவாள் அவர்கள் அறிவுறுத்தினார். பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் ஜெயமங்கள பஞ்சமுக ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி 36 அடி உயரம், 5 முகங்கள், 10 கைகளுடனும் ஜூன் மாதம் 12ந் தேதி 2003ம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டார். ஆஞ்ஜநேயர் ஸந்நிதியைத் தவிர ஜெயமங்கள வலம்புரி மஹாகணபதிக்கு ஓர் ஸந்நிதியும், 10 பரிவாரங்களுடன் ஜெயமங்கள பட்டாபிஷேக ராமருக்கு ஓர் ஸந்நிதியும் அமையப் பெற்று Jan 31, 2007ம் ஆண்டு வெகு விமரிசையாக குடமுழுக்கு நடைபெற்றது. தொடர்ந்து தினமும் 6 கால பூஜைகள் நடைபெற்று வருகிறது. திருமலை திருப்பதி உத்ஸவ மூர்த்தி ஸ்ரீதேவி ஸ்ரீபூதேவி ஸமேதராய் பஞ்சவடீ க்ஷேத்திரத்திற்கு 2009 March 15 மற்றும் March 16 ம் தேதிகளில் எழுந்தருளி திருமலையில் நடப்பது போன்றே ஸுப்ரபாதம், திருமஞ்சனம், தோமாலை ஸேவை மற்றும் ஸஹஸ்ரநாம அர்ச்சனை கண்டருளி பக்தர்களுக்கு பேரருள் புரிந்தார். மலையப்ப ஸ்வாமி என்று அழைக்கப்படும் இந்த உத்ஸவ மூர்த்தியின் பஞ்சவடீ விஜயம் ஒரு முன்னோட்டமாகவே அமைந்தது என்பது பின்னாளில் புலப்பட்டது.

8. 2007ல் முதல் குடமுழுக்கு நடைபெற்று பக்தர்களுக்கு பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் தொடர்ந்து பாகவத மரியாதையும் ப்ரஸாதங்களும் வழங்கப்பட்டு வருகினறன. ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணிகள், செப்பனிடுதல் போன்ற மராமத்து வேலைகள் நிறைவு செய்து மீண்டும் கும்பாபிஷேகம் நடத்த வேண்டும். இந்த மகத்தான திருப்பணியை Panchamukha Sri Jayamaruthi Seva Trust ன் Chairman மற்றும் Managing Trustee திரு.M.கோதண்டராமன் அவர்கள் தலைமையில் திட்டமிட்டனர். அப்போது திரு.M.கோதண்டராமன் அவர்கள் பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் ஸ்ரீவாரி வேங்கடாசலபதி ஸ்வாமி தான் விரும்பிய காலத்தில் தானே நேரில் எழுந்தருள்வதாக பையனூரில் அஷ்டமங்கள தேவப்ரசனம் மூலம் அருள்பாலித்தாரே அதன் பொருள் என்ன என்று வினவினார். பஞ்சவடீ க்ஷேத்திர அறங்காவலர் குழுவுடன் திருமலை திருப்பதி ஸ்ரீவேங்கடாசலபதியை தரிசித்து விட்டு திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளிடம் இது பற்றி விளக்கம் அளித்தார். அந்த அதிகாரிகள் பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் ஒரு உன்னத ஸந்நிதி அமையும் பட்சத்தில் தாங்களே அந்த ஸ்ரீவாரி வேங்கடாசலபதி ஸ்வாமி திருமூர்த்தத்தை (சிலையை) TTD மூலம் வடிவமைத்துத் தருவதாக வாக்களித்தனர். சொன்ன படிக்கே அவர்கள் ஸ்ரீவாரி வேங்கடாசலபதி ஸ்வாமி மூல விக்ரஹம் அவர்களுடைய சிற்பக் கூடத்தில் பூரண கலைகளுடன் அமையப் பெற்று ஸ்ரீவாரி வேங்கடாசலபதி ஸ்வாமியை பஞ்சவடீ க்ஷேத்திர அறங்காவலர் குழு தலைவர் திரு.ஆ. கோதண்டராமன் அவர்களிடம் March2019ல் அளித்தனர். அப்பொழுதே திரு.M.கோதண்டராமன் அவர்கள் பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் ஸ்ரீவாரி வேங்கடாசலபதி ஸ்வாமி ஸந்நிதி கொண்டருளும் ஸ்தலம் இன்று முதல் **"மத்திய திருப்பதி"** என்றே அழைக்கப்படும் என்று உணர்ச்சி பொங்கக் கூறினார். அறங்காவலர் குழு இதனை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு, ஸ்வாமி மூல விக்ரஹத்தை பஞ்சவடீ க்ஷேத்திரத்திற்கு எழுந்தருளப் பண்ணினர். ஜலாதிவாசம், தான்யவாசம், க்ஷீராப்திவாசம் முதலிய அதிவாசங்களை ஏற்றுக் கொண்டு ஸ்ரீவாரி வேங்கடாசலபதி ஸ்வாமி மத்திய திருப்பதி க்ஷேத்திரத்தில் May 10, 2019 ல் தன்னை ஸ்தாபனம் செய்து கொண்டார். பின்னர் 2019 ஜூன் 23ந்தேதி ஞாயிற்றுக்கிழமையன்று தேவர்தானவர் மற்றும் கின்னர்கள் ஆகாசத்திலிருந்து புஷ்பமாரி பொழிய வேத கோழங்கள் முழங்க மற்றும் மங்கள வாத்யங்கள் முழங்க பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் மஹா ஸம்ப்ரோக்ஷணம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பரவசப்பட மிகவும் உன்னதமாக நடந்தேறியது. குறிப்பாக மத்திய திருப்பதி க்ஷேத்திரத்தில் ஸ்ரீவாரி வேங்கடாசலபதி ஸ்வாமியின் அழகான அந்த ஸந்நிதியின் விமான கலசத்தில் பல புண்ணிய நதிகளிலிருந்து கொணரப்பட்டு பூஜிக்கப்பட்ட தீர்த்தம் சேர்க்கப்பட்ட போது பக்தர்களின் பக்தியுடன் உணர்ச்சி பரவசமான கோவிந்தா கோவிந்தா என்ற கோஷம் விண்ணை முட்டியது. கோவிந்தன் திருவருள் எல்லோரும் பெற்று இவ்வையகம் தழைக்க நாம் பிரார்த்திப்போமாக

மத்திய திருப்பதி வேங்கடாசலபதி ஸ்வாமிக்கு மங்களம்
நித்ய மங்களம் நித்ய ஸ்ரீ நித்ய மங்களம்